

# தமிழறிவு

தொகுப்பு

**திருமதி கவிதா சந்திரகுமார்**

B.A (Hons), M.A (In Tamil), Dip. in. Edu.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழறிவு

## வினாவிடைத் தொகுப்பு - I

(தமிழியல் சார்பான வினாக்களும் விடைகளும்)

தொகுப்பு
திருமதி கவிதா சந்திரகுமார்
B.A (Hons),M.A (In Tamil), Dip. in. Edu.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : தமிழறிவு
வினாவிடைத் தொகுப்பு – I

ஆசிரியர் : திருமதி. கவிதா சந்திரகுமார்

பக்கங்கள் : 50 + vi

முதற் பதிப்பு : 2013

வெளியீடு : ஆசிரியர் கழகம்,
யா/புனித கென்றியரசர் கல்லூரி,
இளவாலை.

அச்சுப் பதிப்பு : கங்கை பிறிண்டேர்ஸ்,
743, கே.கே.எஸ்.றோட்,
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

விலை : 90/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு காட்டி அறிவூட்டி

என் வாழ்விற்கு வளம் சேர்த்த

என் அன்புத் தந்தை

பொன்னுத்துரை நித்தியானந்தன்

அவர்களுக்கு இந்நூல்

சமர்ப்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

மாணவர்களின் தமிழ் அறிவை மேம்படுத்தும் உயரிய நோக்குடன் அவர்களின் தேவையறிந்து, பொருத்தமான நேரத்தில், தேடல் மூலம் ஆசிரியர் அவர்களினால் உருவமைக்கப்பட்டுள்ள இத் தொகுப்பு தமிழ் கற்கும் மாணவ சமூகத்திற்கு மிகப் பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை. இன்று வளர்ச்சியடைந்துவரும் கல்வி முறையானது மாணவர்களின் தேடல் மூலம் பண்புசார் விருத்தியை அடைவதினை நோக்காகக் கொண்டதாகக் காணப்படுகிறது. அந்த வகையில் எமது கல்லூரி ஆசிரியர் திருமதி கவிதா சந்திரகுமார் அவர்களின் இத் தொகுப்பு முயற்சி மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்வதோடு நின்று விடாமல், அவை தொடர்பில் விரிவான விடயங்களை ஆய்ந்தறியத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. வினா விடையாக விடயங்கள் உரிய முறையில் உட்புகுத்தப்பட்டுள்ளன.

இவரது முயற்சி எனக்குப் பெருமகிழ்வை தருகிறது. இவ்வாசிரியர் தான் கற்றவற்றை மற்றோரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்குடனும் அருகி வரும் தமிழறிவை அதிகரிக்கும் நோக்குடனும் இதனை வெளியிட்டமை பாராட்டுதற்குரியது. எனவே இதுபோல் இன்னும் அவரது தேடல்கள் விரிவடைய வேண்டும். இவர் மூலம் பல வடிவங்களில் 'தமிழியல் சார்' நூல்கள் வெளிவர வேண்டும், இவரால் தமிழ்ச்சமூகம் பெரும் பயன் அடைய வேண்டும் என வாழ்த்தி நிற்பதோடு இறையருள் இவருக்கு நிறைவாகக் கிடைக்க வேண்டுமெனவும் ஆசித்து நிற்கின்றேன்.

நன்றி

**வண.பிதா.ஜோ.அ.ஜேசுதாஸ்**
அதிபர்
யா/புனித கென்றியரசர் கல்லூரி
இளவாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"சிந்தையில் தேனமுது ஊறி
நாவில் தித்தித்து தித்தித்து செவிவழி ஏறி
வந்து கலந்து இருள் கீறி
எம்மை வாழ்விக்கும் மொழி எம் தமிழ்மொழி"

குமரி முதலாக இமயம் வரையாக முடிகொண்டு வாழ்ந்த முத்தமிழ் தன்னிகரற்ற காவியங்கள் பலவற்றைத் தன் அணிகலன்களாகப் பூண்ட தண்டமிழ். இத்தகைய பெருமை வாய்ந்த தமிழ்மொழி தொடர்பான, தமிழ் இலக்கியம் தொடர்பான தகவல்களை வினாவிடை ரீதியாக தொகுக்கும் முயற்சியே இதுவாகும். இது முதல் முயற்சி. இதன் ஏனைய தொகுப்புக்கள் தொடர்ந்தும் வெளிவர இறையருள் புரிய வேண்டும்.

இந் நூலில் மாணவர்கள் மாத்திரமன்றி அனைத்து தரப்பிலுள்ள தமிழார்வலர்களும் படித்து பயன்பெறக்கூடிய விடயங்கள் வினாக்களும் விடைகளுமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இயன்றவரை மாணவர் சமூதாயத்திற்குப் பெரிதும் பயனளிக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

இந் நூலில் குறைகள் ஏதும் காணப்படின் சான்றோர் எடுத்துக் காட்ட வேண்டுமென உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றேன். அவை இந்நூலை மேலும் வளம்படுத்த உதவும்.

தொகுப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழறிவு வினா விடை

1. சங்ககாலத்தில் தமிழ்நாடு எனக் கூறப்பட்ட நிலப்பரப்பு
வடக்கே வேங்கடத்தையும் தெற்கே குமரி முனையையும் எல்லையாகக் கொண்டு விளங்கிய நிலப்பரப்பு.

2. பண்டைக்காலத்தில் தமிழ்மக்கள் சிறந்த பண்பாடுடையவர்களாக வாழ்ந்தனர் என்பதற்கான சான்றுகள்.
யவன தேசத்தவர் குறிப்புக்கள்.
வடமொழி நூல்கள்.
வரலாற்றுக் குறிப்புக்கள்.

3. சங்க காலத்திற்குரிய காலப்பகுதி.
கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகள்.

4. முடியுடை மூவேந்தர்கள் எனப்படுவோர்.
சேர, சோழ, பாண்டியர்.

5. சங்ககால குறுநில மன்னர்களிற் சிலர்.
பாரி, ஓரி.

6. பண்டைத் தமிழகத்தில் சிறப்புற்றுக் காணப்பட்ட துறைமுகப்பட்டினங்கள்
முசிறி, தொண்டி, கொற்கை, புகார்.

7. பண்டைக்காலத்தில் காணப்பட்ட முச்சங்கங்கள்
முதற்சங்கம் - தென்மதுரை (பாண்டியர் தலைநகரம்)
இடைச்சங்கம் - கபாடபுரம்
கடைச்சங்கம் - மதுரை.

8. முதற்சங்கப் புலவர்களாக விளங்கியோர்.
அகத்தியர், முரஞ்சியூர் முடிநாகராஜர்.

9. இடைச்சங்கப் புலவர்களாக விளங்கியோர்.
தொல்காப்பியர், வள்ளூர்க் காப்பியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கடைச்சங்கப் புலவர்களாக விளங்கியோர்.
கபிலர், பரணர், நக்கீரர்.

11. எமக்குக் கிடைக்காத முதற்சங்க நூல்களாகக் கொள்ளப் படுபவை.
முதுநாரை, முதுகுருகு.

12. எமக்குக் கிடைக்காத இடைச்சங்க நூல்களாகக் கொள்ளப் படுபவை.
வெண்டாழி, வியாழமாலையகவல்.

13. சங்ககாலத்தில் காணப்பட்ட முச்சங்கங்கள் பற்றிய குறிப்பைத் தரும் நூல்.
இறையனாரகப் பொருளுரை.

14. பண்டைக்காலத்தில் தமிழ்நாட்டில் தமிழை வளர்த்த பேரறிஞர்களுள் தலைசிறந்தவராகக் கொள்ளப்படுபவர் யார்?
அகத்தியர் .
(அகத்தியரால் இயற்றப்பெற்ற இலக்கணநூல் அகத்தியம்.)

15. அகத்தியரின் சிறப்பு யாது?
சிவனிடத்தில் தமிழைக் கேட்டறிந்தவர்.
முத்தமிழையும் கற்றுணர்ந்தவர்.

16. அகத்தியரின் மாணாக்கர் யாவர்?
தொல்காப்பியர், அதங்கோட்டாசிரியர், காக்கைபாடினியார் முதலிய பன்னிருவர்.

17. அகத்தியத்திற்கு வழிநூலாக விளங்கும் நூல்கள்.
தொல்காப்பியம், வாய்ப்பியம், அபிநயம், காக்கைபாடினியம்.

18. முத்தமிழ் எனப்படுவது?
இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. இயற்றமிழ் எனப்படுவது?
இலக்கணத்தோடு கூடிய தமிழ். அது உரையும் பாட்டும் என இருவகைப்படும்.

20. இசைத்தமிழ் எனப்படுவது?
பாட்டு இசையோடும் தாளத்தோடும் கூடியவிடத்து இசைத் தமிழ்.

21. நாடகத்தமிழ் எனப்படுவது?
உரையும் பாட்டும் அபிநயத்தோடு கூடியவிடத்து நாடகத்தமிழ்.

22. சங்ககால நூல்களாகக் கொள்ளப்படுபவை.
எட்டுத்தொகை, பத்துப்பாட்டு – பதினெண் மேற்கணக்கு நூல்கள்.

23. எட்டுத்தொகை நூல்களுள் அகம் பற்றிப் பாடுவன
நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, கலித்தொகை, குறுந்தொகை.

24. எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றிப் பாடுவன.
புறநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல் (03 நூல்கள்)

25. பத்துப்பாட்டு நூல்களுள் அகம் பற்றிப் பாடுவன.
முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை.

26. பத்துப்பாட்டு நூல்களுள் புறம் பற்றிப் பாடுபவை.
திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை.

27. சங்ககாலத்தில் தோற்றம்பெற்ற ஆற்றுப்படை நூல்கள் எவை?
திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை
(05 நூல்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. சங்ககால நூல்களுள் அகமும் புறமும் விரவிவரப் பாடப்பட்ட நூல்கள்.
நெடுநல்வாடை, பரிபாடல்.

29. சங்ககாலச் செய்யுட்களின் பொருள்மரபு எதனை ஆதாரமாகக் கொண்டது.
மக்களின் வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டு பாடப்பட்டது.

30. சங்ககால மக்கள் வாழ்க்கை எவ்வாறு வகுக்கப்பட்டது?
அகத்திணை, புறத்திணை.

31. அகத்திணை, புறத்திணை என்பவை சுட்டும் பொருள் யாவை?
அகத்திணை என்பது – காதல் ஒழுக்கம்.
புறத்திணை என்பது – போர் ஒழுக்கம், பெயர்சுட்டிப் பாடும் காதற் பாடல்கள்.

32. ஐந்திணைகளும் எவை?
குறிஞ்சி
முல்லை
மருதம்
நெய்தல்
பாலை.

33. அவற்றுக்குரிய காதல் ஒழுக்கங்கள் எவை?
குறிஞ்சி - புணர்தல்
முல்லை - இருத்தல்
மருதம் - ஊடல்
நெய்தல் - இரங்கல்
பாலை. - பிரிதல்.

34. ஐவகை நிலங்களில் குறிஞ்சி என்பது எதனைக் குறித்து நிற்கிறது,
மலையும் மலைசார்ந்த நிலத்தினையும்

35. ஐவகை நிலங்களில் முல்லை என்பது எதனைக் குறித்து நிற்கிறது,
காடும் காடு சார்ந்த நிலத்தினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. ஐவகை நிலங்களில் மருதம் என்பது எதனைக் குறித்து நிற்கிறது,
வயலும் வயல் சார்ந்த நிலத்தினையும்

37. ஐவகை நிலங்களில் நெய்தல் என்பது எதனைக் குறித்து நிற்கிறது,
கடலும் கடல் சார்ந்த நிலத்தினையும்

38. ஐவகை நிலங்களில் பாலை என்பது எதனைக் குறித்து நிற்கிறது,
மணலும் மணல் சார்ந்த நிலத்தினையும்

39. அன்பிணைந்திணை என்று சிறப்பித்துக் கூறப்படுபவை.
புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனும் ஐந்து தூய காதலொழுக்கங்கள்.

40. குறிஞ்சி நிலத்தவர்களுக்குரிய தொழில்களாகக் கொள்ளப் படுபவை.
வேட்டையாடுதல், தினை விளைவித்தல்.

41. புணர்தல் ஒழுக்கம் எவ்வாறு பாகுபடுத்தப்படும்.
இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கர்கூட்டம், பகற்குறி, இரவுக்குறி, வரைவுகடாவுதல்.

42. பகற்குறி என்றால் என்ன?
தலைவன், தலைவி பகலில் இடம் குறித்துச் சந்திப்பது.

43. இரவுக்குறி என்பது.
தலைவன், தலைவி இரவில் இடம் குறித்துச் சந்திப்பது.

44. சங்கச் செய்யுட்களில் இலக்கிய பாத்திரங்களாகச் சித்திரிக்கப்படுபவர்கள் யாவர்?
தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி, நற்றாய்.

45. பாலைநிலத்தவர்களின் தொழிலாக அமைவன.
ஆறலைத்தல், சூறையாடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. தொகை நூல்களில் எத்திணைக்குரிய செய்யுட்கள் அதிக மாகக் காணப்படுகின்றன.
பாலைத்திணைச் செய்யுட்கள்.

47. உடன்போக்கு எனப்படுவது.
தலைவன் தலைவி ஒருங்கு செல்லுதல்.

48. முல்லை நிலத்தவர்க்குரிய தொழில்.
மந்தை மேய்த்தல்.

49. முல்லை நிலமக்கள் அமைக்கும் பாசறைகள் எவை?
வேனிற்பாசறை, கூதிர்ப்பாசறை.

50. இருத்தல் ஒழுக்கத்தைச் சிறப்பாகப் பாடும் சங்கநூல்கள்.
முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை.

51. மருதநில மக்களின் பிரதான தொழிலாக அமைவது.
உழவுத்தொழில்.

52. நெய்தல் நிலத்தவரின் பிரதான தொழிலாக அமைவது.
மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல்.

53. அன்பினைந்திணைக்குள் அடங்காத அகவொழுக்கங்கள்.
கைக்கிளை, பெருந்திணை.

54. கைக்கிளை என்பது.
ஒருதலைக்காமம்.

55. பெருந்திணை என்பது.
பொருந்தாக்காமம்.

56. இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னர் நிகழுபவை எவை?
காட்சி, ஐயம், தெளிதல், தேறல்.

57. பெருந்திணையில் அடங்குபவை.
வரைபாய்தல், மடலேறுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. மடலேற்றத்தின் வரலாறு விளக்கப்பட்டிருக்கும் நூல்கள்.
குறுந்தொகை, கலித்தொகை.

59. மடலேற்றத்தின்போது பனைமடலால் செய்யப்பட்ட குதிரை எவ்வாறு அழைக்கப்பட்டது?
மடல்மா.

60. குறிஞ்சித் திணைக்குரிய புறவொழுக்கம் எது?
வெட்சி.

61. முல்லைத் திணைக்குரிய புறவொழுக்கம் எது?
வஞ்சி.

62. மருதத் திணைக்குரிய புறவொழுக்கம் எது?
உழிஞை.

63. நெய்தல் திணைக்குரிய புறவொழுக்கம் எது?
தும்பை.

64. பாலைத் திணைக்குரிய புறவொழுக்கம் எது?
வாகை.

65. பிறர்நிலத்து மந்தைகளைக் களவிற் கொண்டு போதல் காரணமாக ஏற்படும் போர்.
வெட்சி.

66. வாகைப்பூ எதன் அறிகுறியாகக் கொள்ளப்பட்டது.
வெற்றி.

67. பகைவரை அடக்குதற் பொருட்டு எல்லைப்புறங்களுக்குச் சென்று பாடிவீடமைத்து தங்கியிருந்து நிகழ்த்திய போர் எவ்வாறு அழைக்கப்பட்டது.
வஞ்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. செயற்கை அரணை முற்றுகை இடக்கருதிய பகை மன்னனுக்கும் அரணகத்திலிருக்கும் படைகளுக்குமிடை யேயான போர் எவ்வாறு அழைக்கப்பட்டது?
உழிஞை

69. சங்ககாலத்தில் களம் குறித்து நிகழ்த்தும் போர் எவ்வாறு அழைக்கப்பட்டது?
தும்பை.

70. யாக்கை, செல்வம், இளமை முதலியவற்றின் நிலையா மையைப் பாடும் புற ஒழுக்கம் எவ்வாறு அழைக்கப்படும்?
காஞ்சித்திணை.

71. காஞ்சித்திணையின் வகைகள் எவை?
ஆண்பாற் காஞ்சி, பெண்பாற் காஞ்சி.

72. ஆண்பாற் காஞ்சியுள் அடங்குபவை
போரில் புண்பட்ட வீரன் புண்ணைக் கிழித்துக் கொண்டு இறத்தல்.
புண்பட்ட வீரனை நாய், நரி தீண்டாவண்ணம் காத்தல்.

73. பெண்பாற் காஞ்சியுள் அடங்குபவை.
போர்க்களத்தில் இறந்த தலைவனை தலைவி தழுவி அழுதல்.
உடனுயிர் நீத்தல், உடன்கட்டையேறுதல்.

74. பாடாண்திணை என்பது?
பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறு

75. பாடாண்திணையுள் அடங்குபவை.
கடவுள் வாழ்த்து.
அறுமுறை வாழ்த்து.
புறநிலை வாழ்த்து.

76. அறுமுறை வாழ்த்து என்றால் என்ன?
அரசர், முனிவர், பார்ப்பார், பசு, நாடு, மழை ஆகிய ஆறையும் வாழ்த்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. 'கையது வேலே காலது புனைகழல்...." என புறநானூற்றுப் பாடலில் புகழப்படும் மன்னர் யார்?
அதியமான் நெடுமானஞ்சி – ஔவையார் பாடியது.

78. சேரமன்னர் பதின்மர் மீது பத்துப் பத்து பாடல்களாகப் பாடப்பட்டது?
பதிற்றுப்பத்து.

79. அகநானூறு எனும் இலக்கியத்தின் அடி எல்லை யாது?
பதின்மூன்றடி சிற்றெல்லை முப்பத்தோரடி பேரெல்லை.

80. நற்றிணை எனும் இலக்கியத்தின் அடி எல்லை யாது?
ஒன்பதடி சிற்றெல்லை எட்டடி பேரெல்லை.

81. குறுந்தொகை எனும் இலக்கியத்தின் அடி எல்லை யாது?
நாலடி சிற்றெல்லை எட்டடி பேரெல்லை .

82. சங்கால அகத்திணை நூல்களுள் ஓர் ஒழுங்குமுறையைப் பின்பற்றி தொகுக்கப்பட்ட நூல் எது?
அகநானூறு.

83. சங்க நூல்களுள் அகத்திணை ஐந்திற்கும் தனித்தனி நூறு செய்யுட்களாக ஐந்நூறு செய்யுட்களைக் கொண்ட நூல்.
ஐங்குறுநூறு.

84. ஐங்குறுநூற்றை தொகுத்தவர் யார்?
கூடலூர்க் கிழார்

85. ஐங்குறுநூற்றின் ஐந்திணைகளையும் பாடியவர் யார்?

| | | |
|---|---|---|
| பாலைத்திணை பாடியவர் | - | ஓதலாந்தை |
| குறிஞ்சித் திணை பாடியவர் | - | கபிலர் |
| மருதத்திணை பாடியவர் | - | ஓரம்போகியார் |
| நெய்தல் திணை பாடியவர் | - | அம்மூவன் |
| முல்லை திணை பாடியவர் | - | பேயன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

86. புலவராற்றுப்படை என அழைக்கப்படும் நூல் எது?
திருமுருகாற்றுப்படை.

87. கலிப்பாவின் வகைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
கொச்சகக் கலி,
ஒத்தாழிசைக்கலி

88. ஒத்தாழிசைக் கலிப்பாவின் உறுப்புக்களாக அமைவன.
தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம்.

89. பரிபாடலில் தற்போது காணப்படும் பாட்டுக்கள்.
24 பாடல்கள்
திருமாலுக்குரியவை – 07
முருகனுக்குரியவை – 08
வையைக்குரியவை – 09

90. செய்யுள் வடிவிலுள்ளவை யாவும் பாட்டு எனப் பெயர் பெற்றாலும் சிறப்பாகப் பாட்டு எனப் பெயர் பெறுபவை.
பத்துப்பாட்டு நூல்கள்.

91. ஆற்றுப்படை நூல்களின் அடிப்படை யாது?
பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறுத்தல், வழிப்படுத்தல்

92. பொருளடிப்படையிலும் மொழிநடையிலும் வேறுபடும் ஆற்றுப்படை நூல்.
திருமுருகாற்றுப்படை.

93. பத்துப்பாட்டு நூல்களுள்ளும் அடியளவால் மிக நீண்டது.
மதுரைக்காஞ்சி

94. மதுரைக்காஞ்சி எனும் நூல் யாரால் யாரைப்பற்றி பாடப்பட்டது?
பாடியது - மாங்குடி மருதனார்
பாடப்பட்டது - தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. சங்ககாலத்தில் மன்னர்- புலவர்களுக்கிடையேயான சிறப்பான உறவை
வெளிக்காட்டுபவர்களாக விளங்கியோர்.
ஔவையார் - அதியமான்

96. சங்ககாலச் செய்யுள் வழக்கு எவ்வாறு அழைக்கப்படும்.
புலனெறிவழக்கு.

97. பிரிவு ஒழுக்கத்தின் வகைகள் சில.
ஓதற்பிரிவு, தூதிற்பிரிவு, பகைவயிற்பிரிவு, பொருள்வயிற் பிரிவு.

98. அகப்பொருள் பாடலில் சிறப்பிக்கப்படும் முப்பொருள்களும் யாவை?
முதல், கரு, உரி.

99. முதல், கரு, உரி என்னும் மூன்று பொருள்களில் அகத்திணை செய்யுள்களுக்கு உயிராக அமைவது,
உரிப்பொருள்.

100. கருப்பொருள்களுள் அடங்குபவை,
மரம், புள், தெய்வம், தொழில் முதலான 16 விடயங்கள்.

101. சங்கச் செய்யுட்களில் அக ஒழுக்கத்தை வெளிப்படுத்த பெரிதும் கையாளப்பட்ட உவமை?
உள்ளுறை உவமை

102. முதல் பொருளில் அடங்குபவை?
நிலமும் பொழுதும்.

103. சாதாரண உவமைக்கும் உள்ளுறை உவமைக்கு மிடையிலான வேறுபாடு யாது?
சாதாரண உவமைகளில் உவமையும் பொருளும் வெளிப் பட்டு நிற்கும்
உள்ளுறை உவமைகளில் உவமை வெளிப்பட்டு நிற்க பொருள் தொக்கு நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

104. புலனெறி வழக்கு என்றால் என்ன?
நாடக வழக்கினையும் உலகியல் வழக்கினையும் ஆதார மாகக் கொண்டது புலனெறி வழக்கு.

105. சங்கமருவிய காலப்பகுதி எனப்படுவது,
கி.பி. 3 - 6 நூற்றாண்டுகள்.

106. சங்ககாலத்திற்குரிய சிறப்புப் பெயர்கள்,
மூவேந்தர் ஆட்சிக்காலம், இயற்கை நெறிக்காலம்.

107. சங்கமருவிய காலத்தை வேறு எப்பெயரால் அழைப்பார்,
அறநெறிக்காலம்.

108. சங்கமருவிய காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்த மக்கட் குழுவினர் யாவர்?
களப்பிரர்.

109. நால்வகை வருணங்களும் எவை,
பிராமணர், சத்திரியர், வைசிகர், சூத்திரர்.

110. சங்கமருவிய காலத்தினை தமிழக அரசியல் வரலாற்றில் எவ்வாறு அழைப்பார்?
இருண்டகாலம்.

111. சமணசமயத்தைத் தமிழ்நாட்டில் வளர்த்தற் பொருட்டு திராவிட சங்கத்தினை மதுரையில் அமைத்தவர்?
சிரநந்தி எனும் சமணமுனிவர்.

112. சங்கமருவிய காலத்தில் பௌத்தசமயப் பிரசாரத்திற்கு முக்கிய இடமாகத் திகழ்ந்தது?
காவிரிப்பூம்பட்டினம்.

113. நமக்குக் கிடைத்த தமிழிலக்கண நூல்களுள்ளே காலத்தால் முந்தியது?
தொல்காப்பியம்.

114. தமிழ்நாட்டுக் களவு மணத்துடன் தொடர்புடைய ஆரிய மணமுறை யாது?
காந்தருவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

115. அகத்திணை, புறத்திணை என்பதில் திணை என்பதன் பொருள் யாது?
ஒழுக்கம்

116. அகஒழுக்கங்கள் எத்தனை அவை யாவை?
(7) கைக்கிளை, புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல், பெருந்திணை

117. புற ஒழுக்கங்கள் எத்தனை அவை யாவை?
(7) காஞ்சி, வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண்

118. அறத்தொடு நிற்றல் என்றால் என்ன?
தலைவன் தலைவியின் களவொழுக்கத்தை தாய் முதலானோரக்கு தெரியப்படுத்தல்.

119. களவொழுக்கத்தில் அடங்குபவை எவை?
இயற்கைப்புணரச்சி முதல் வரைவுகடாவுதல் வரையானவை.

120. கற்பொழுக்கத்தின் பாற்பாடுபவை,
வரைவுகடாவி மணந்து கொண்டபின் நிகழ்வன.

121. அகவொழுக்கத்திற்கு புறமாய் அமையும் புறவொழுக்கங்கள் எவை?

| நிலம் | அகவொழுக்கம் | புறவொழுக்கம் |
|---|---|---|
| குறிஞ்சி | புணர்தல் | வெட்சி |
| முல்லை | இருத்தல் | வஞ்சி |
| மருதம் | ஊடல் | உழிஞை |
| நெய்தல் | இரங்கல் | தும்பை |
| பாலை | பிரிதல் | வாகை |
| | கைக்கிளை | காஞ்சி |
| | பெருந்திணை | பாடாண் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122. பா வகைகள் எவை? அவற்றுக்குரிய ஓசைகள் எவை ?

| பா | ஓசை |
|---|---|
| அகவல் | அகவலோசை |
| வெண்பா<br>கலிப்பா | செப்பலோசை<br>துள்ளலோசை |
| வஞ்சிப்பா | தூங்கலோசை |

123. யாதும் ஊரே யாவரும் கேளிர் எனப் பாடியவர், கணியன் பூங்குன்றனார்.

124. சங்கமருவிய காலத்தில் சைவசமயத்தில் தோன்றிய பிரிவுகள்,
பாசுபதம், காபாலிகம், காளாமுகம்.

125. எல்லா செய்யுள் ஓசைகளுக்கும் மூலவோசைகளாக உள்ளவை,
அகவல், வெண்பா

126. ஓதற்பிரிவுக்குரிய காலவரையறை எத்தனை ஆண்டுகள்,
மூன்று ஆண்டுகள்

127. 'நாடக வழக்கிலும் உலகியல் வழக்கினும்.............." இச் சூத்திரம் காணப்படுவது,
தொல்காப்பியம் பொருளதிகாரத்தில்.

128. பண்டைக்காலம் தொடக்கம் தமிழ்நாட்டின் பண்பாட்டை வளப்படுத்தி வளர்த்து வந்து பேரிலக்கியங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்த நூல்,
திருக்குறள்.

129. திருக்குறளிலுள்ள அதிகாரங்களை வகைப்படுத்துக?

அறத்துப்பால் - 38 அதிகாரங்கள்
பொருட்பால் - 70 அதிகாரங்கள்
காமத்துப்பால் - 25 அதிகாரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

130. தமிழ்நாட்டுக் கதைகளைப் பொருளாகக் கொண்டு எழுந்த ஆதி காப்பியங்கள்.
சிலப்பதிகாரம், மணிமேகலை.

131. காப்பியங்களையும் அவற்றின் ஆசிரியரின் பெயர்களையும் தருக.

| காப்பியங்கள் | ஆசிரியர் |
|---|---|
| சிலப்பதிகாரம் | இளங்கோ அடிகள் |
| மணிமேகலை | சீத்தலைச்சாத்தனார் |
| சீவகசிந்தாமணி | திருத்தக்கத்தேவர் |
| வளையாபதி | - |
| குண்டலகேசி | நாகுதத்தனார் |

132. பெருங்காப்பியங்கள் ஐந்தினுள் காலத்தால் முந்தியது, சிலப்பதிகாரம்.

133. முத்தமிழ்க்காப்பியம் என அழைக்கப்படுவது எது?
சிலப்பதிகாரம்.

134. இரட்டைக்காப்பியம் என அழைக்கப்படுபவை எவை?
சிலப்பதிகாரம், மணிமேகலை

135. சிலப்பதிகாரத்தின் பிரிவுகளைத் தருக?
மதுரைக்காண்டம், புகார்க்காண்டம், வஞ்சிக்காண்டம்.

136. சிலப்பதிகாரத்தில் சேரமன்னன் கண்ணகிக்கு கோவிலெடுத்த வரலாற்றைக் கூறும் காண்டம் எது?
வஞ்சிக்காண்டம்

137. ஐம்பெருங்காப்பியங்கள் ஒவ்வொன்றும் எச்சமயத்தைச் சார்ந்தவை?

சிலப்பதிகாரம் - சமணசமயக் காப்பியம்
மணிமேகலை - பௌத்தமதக் காப்பியம்
சீவகசிந்தாமணி - சமணசமயக் காப்பியம்
வளையாபதி - -
குண்டலகேசி - பௌத்தசமயக் காப்பியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

138. மணிமேகலை மீது காதல் கொண்டவன்
உதயகுமாரன்

139. மணிமேகலை யாருடைய வடிவெடுத்து உதயகுமாரனை ஏமாற்றினாள்?
காயசண்டிகை

140. காயசண்டிகையின் கணவன்,
காஞ்சனன் (விச்சாதரன்)

141. மணிமேகலைக்கு அற உபதேசம் செய்தவர்,
அறவணஅடிகள்

142. அடிநிமிர்வில்லாச் செய்யுள் என அழைக்கப்படுவது,
வெண்பா

143. சங்கமருவியகால நூல்களுள் அறநூல்களாக விளங்கும் நூல்கள் எத்தனை?
11

144. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அறம், பொருள், இன்பம், எனும் முப்பொருளையும் கூறும் நூல்கள் எவை?
திருக்குறள், நாலடியார்

145. "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி".
என்பதில் நாலும் இரண்டும் எனக்குறிப்படப்படுபவை.
நாலு - நாலடியார்
இரண்டு - திருக்குறள்

146. நாலடி நானூறு என அழைக்கப்படும் நூல்.
நாலடியார்.

147. நாலடியார் பாடல்களைத் தொகுத்தவர்.
பதுமனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

148. சங்கமருவிய காலத்தில் தோன்றிய புறத்திணை நூல்.
களவழி நாற்பது.

149. இருத்தல் ஒழுக்கத்திணை நாற்பது வெண்பாக்களில் பாடியுள்ள நூல்.
கார் நாற்பது.

150. ஆரியர் போற்றிய அறநெறிகள் முதலியவற்றை தமிழ் மக்கள் பெரிதும் போற்றித் தழுவிய காலம் தமிழிலக்கிய வரலாற்றில் எது?
சங்கமருவிய காலம்.

151. காரைக்காலம்மையார் அருளிச் செய்த பிரபந்தங்கள்?
அற்புதத் திருவந்தாதி.
திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்.
திருவிரட்டை மணிமாலை.

152. கால ஆராய்ச்சி எனும் நூலை எழுதியவர் யார்?
மா.இராசமாணிக்கனார்.

153. தற்காலத்தமிழ் இலக்கியம் என்னும் நூலை எழுதியவர் யார்?
மு.வி.சுப்பிரமணியஐயர்.

154. முதன்முதலில் ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தைத் தொகுத்தவர் யார்?
ஆ.சதாசிவம்.

155. ஈழத்துச் சதாவதானியின் இயற்பெயர் யாது?
சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை.

156. பாவலர் சரித்திர தீபகத்தை எழுதியவர் யார்?
ஆனல்ட். சதாசிவம்பிள்ளை.

157. தத்தைவிடு தூது பாடியவர் யார்?
கி.த. சரவணமுத்துப்பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

158. அகிலேச பிள்ளையின் பிறந்த இடம் எது?
திருகோணமலை.

159. ஈழத்து ஆசுகவியின் இயற்பெயர் என்ன?
கல்லடி வேலுப்பிள்ளை.

160. "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்னும் பாடலை இயற்றியவர் யார்?
நாவாலியூர் சோமசுந்தரப்புலவர்.

161. விபுலானந்தர் பிறந்த ஊர் யாது?
மட்டக்களப்பிலுள்ள காரைதீவு.

162. "சடங்கு" நாவல் யாரால் எழுதப்பட்டது?
செ.கணேசலிங்கன்.

163. "நீதியே நீ கேள்" நாவலை எழுதியவர் யார்?
இளங்கீரன்.

164. கே.டானியலின் முதல் நாவலின் பெயரைத் தருக.
பஞ்சமர்.

165. ஈழகேசரி எந்த நாட்டில் வெளிவந்த பத்திரிகை?
இலங்கை.

166. ஈழகேசரி பத்திரிகையின் ஆசிரியர் பெயர் என்ன?
பொன்னையா.

167. "முருகன் திருகுதாளம்" நாடகம் யாரால் எழுதப்பட்டது?
க.கணபதிப்பிள்ளை.

168. "மரிய மதலேனா" சிறுகதையை எழுதியவர் யார்?
இலங்கையர்கோன்.

169. "பூமரங்கள்" குறுநாவல் யாரால் எழுதப்பட்டது?
கே.டானியல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

170. கோடை நாடகம் யாரால் எழுதப்பட்டது?
மகாகவி உருத்திரமூர்த்தி.

171. "அன்னபூரணி" நாவல் எந்தப் பத்திரிகையில் வெளிவந்தது?
ஈழகேசரி.

172. கோவிந்தன் எனும் நாவலில் வரும் நாய் எந்த ஊரைச் சேர்ந்தது?
ராஜபாளையம்.

173. "சந்திரகாசம்" நாடகம் எக்கிளைக் கதையின் தழுவலாகும்?
மகாபாரதம்.

174. ஈழத்து நாட்டார் பாடல்களை முதன்முதல் தொகுத்தவர் யார்?
மு.இராமலிங்கம்.

175. "ஒரு தோழனின் காதற்கடிதம்" யாரால் பாடப்பட்டது?
புதுவை இரத்தினதுரை.

176. "சாவித்திரிதேவி சரிதம்" நாடகம் யாரால் எழுதப்பட்டது?
பண்டிதர் க.சிதம்பரநாதன்.

177. நல்லை நாவலன் கோவையின் ஆசிரியர் யார்?
கந்த முருகேசனார்.

178. சைவதூஷன பரிகாரம் நூலை எழுதியவர் யார்?
ஆறுமுகநாவலர்.

179. நாவலர் நூற்றாண்டு மலர் எப்போது வெளியிடப்பட்டது?
1979.

180. நாவலர் எங்கே உருத்திராக்கம் சூட்டப்பெற்றார்?
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

181. இலக்கணச்சுருக்கம் யாரால் இயற்றப்பட்டது?
ஆறுமுகநாவலர்.

182. பெரியபுராண வசனத்தை முதலில் ஆக்கியவர் யார்?
ஆறுமுகநாவலர்.

183. நாவலர் முதற் பிரசங்கம் எங்கே நடந்தது?
வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில்.

184. மனைவியைத் தெய்வமாக வழிபட்டவர் யார்?
இராமகிருஷ்ணபரமஹம்சர்.

185. மொழிபெயர்தேயம் பற்றிக் குறிப்பிடும் சங்ககால இலக்கியம் எது?
அகநானூறு.

186. வடமொழி என்ற சொல்லின் இயற்பெயர் என்ன?
சமஸ்கிருதம்.

187. மாக்கதை என அழைக்கப்பட்ட நூல் எது?
பெரியபுராணம்.

188. தமிழின் முதல் எழுந்த பேரிலக்கியத்தின் மூலக்கதையைக் கூறியவர் யார்?
சாத்தனார்.

189. யசோதர காவியம் எந்த வடமொழி நூலின் மூலத்தைப் பெற்றது?
புஸ்பதந்தா.

190. வடமொழி தர்ம சாஸ்திரத்தின் தமிழாக்கம் செய்யப்பட்ட நூல் எது?
ஆசாரக்கோவை.

191. குசேலாபாக்கியானம் என்ற நூலைப் பாடியவர் யார்?
தேவராசப்பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

192. கீதா என்பதன் பொருள் என்ன?
பாடப்படுவது.

193. உமர்கயாம் பாடல்கள் தமிழில் எத்தனை அறிஞர்களால் மொழிபெயர்க்கப்பட்டது?
12.

194. பாரதி எந்த நாட்டின் தேசியகீதத்தை மொழிபெயர்த்தார்?
பிரெஞ்சு.

195. மறைமலையடிகளின் இயற்பெயர் யாது?
வேதாசலம்

196. "கெஞ்சி மொனகதரி" எந்த மொழியில் எழுதப்பட்ட நாவல்?
ஜப்பான்.

197. பாரதியார் மொழிபெயர்த்த ஜப்பானியர் குறும்பாடலைப் பாடியவர் யார்?
நொகுச்சி.

198. மொழிபெயர்ப்பாளருக்கு குறைந்தது எத்தனை மொழிப் புலமை இன்றியமையாதது?
2.

199. குறுந்தொகையை ஆங்கிலத்தில் முழுவதையும் மொழி பெயர்த்தவர் யார்?
LUDDEN.

200. குறுந்தொகை 40வது பாடலைப் பாடியவர் யார்?
செம்புலப்பெயர் நீரார்.

201. மன்யோகசு என்பதன் நேரடி மொழிபெயர்ப்பு என்ன?
பத்தாயிரம் இலைத்தொகுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

202. சிறுவர்களுக்கான மொழிபெயர்ப்பை வகைப்படுத்திக் கூறியவர் யார்?
மணவை முஸ்தபா.

203. பாவலர் துரையப்பாபிள்ளையின் பாடல்களின் தொகுப்பு நூலின் பெயர் என்ன?
சிந்தனைச் சோலை.

204. சகலகுணசம்பன்னன் நாடகம் யாரால் எழுதப்பட்டது?
பாவலர் துரையப்பாபிள்ளை.

205. பாவலர் பாடிய சைவசமயச் சார்பற்ற நூல் எது?
எங்கள் தேசநிலை.

206. மன்யோசுப் பாடல்கள் முதலில் எழுதப்பட்ட வரிவடிவத்தின் பெயர் என்ன?
மன்யோகத.

207. "புதியதோர் உலகம் செய்வோம்" பாடலைப் பாடியவர் யார்?
பாரதிதாசன்

208. சங்க இலக்கியத்தில் "செவிலி" என்ற சொல் யாரைக் குறிக்கும்?
வளர்ப்புத்தாய்

209. "நம்மைப் பேணும் அம்மை" என்ற தொடர் எந்நூலில் உள்ளது?
பெரிய புராணம்.

210. திணை ஒன்றிற்கு 12 செய்யுட்களாக ஐந்து திணைக்கும் அறுபது செய்யுட்களையுடையது எந்நூல்?
கைந்நிலை.

211. பழமொழி நானூறு எனும் நூற்பெயர்க் காரணம் - இது 400 வெண்பாக்களை உடையது. ஒவ்வொரு வெண்பாவும் ஒவ்வொரு பழமொழியைக் கொண்டு விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

212. கைக்கிளை, பெருந்திணை ஆகிய ஒழுக்கங்களை மிகுதியும் பாடும் சங்ககால அக இலக்கியம் எது?
கலித்தொகை.

213. இறையனாரகப் பொருளுக்கு உரை எழுதியவர்?
நக்கீரர்.

214. பல்லவர்கால பக்தி இலக்கியங்களுக்கு விடிவெள்ளியாய் அமைந்தவை எனக் குறிப்பிடுபவை எவை?
காரைக்காலம்மையார், முதல் மூவாழ்வார்கள் பாடல்கள்

215. வினாவுக்கு விடை இறுக்கும் தன்மையை உடையனவாய் விளங்கும் யாப்பு எது?
வெண்பா.

216. தமிழிலக்கியத்தில் முதன்முதல் பாவினங்களைக் கையாண்டு இலக்கியத்தைப் படைத்தவர்?
காரைக்காலம்மையார்.

217. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனக் குறிப்பிடப் படும் இலக்கியம் எது?
சிலப்பதிகாரம்.

218. சிலப்பதிகாரத்தில் எப்பகுதி தமிழுரைநடையில் ஆரம்ப நிலையினை ஞாபகப்படுத்துவதாய் உள்ளன?
கானல்வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை.

219. பாட்டும் உரையும் கலந்த நடை வழிமொழியில் எவ்வாறு அழைக்கப்படும்?
சம்புநடை.

220. சம்புநடையில் அமைந்த இலக்கியங்களாகக் கொள்ளப் படுபவை?
பெருந்தேவனார் பாரதம், தகடூர் யாத்திரை.

221 அறநூல்கள் யாவற்றுள்ளும் தலைசிறந்து விளங்குவது.
திருக்குறள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

222. அறவொழுக்கங்களை எடுத்துக் கூறுவதற்கு ஏற்ற யாப்பு?
வெண்பா.

223. மூலவோசைகள் எனக் குறிப்பிடப்படுபவை.
அகவலோசை, செப்பலோசை.

224. தூய்மை பொருந்திய பா எது?
வெண்பா. (கருதிய பொருளை வெளிப்படையாக உணர்த்தல்)

225. அந்தணர் பாவென்று அழைக்கப்பட்ட பா எது?
வெண்பா.

226. நின்ற சீர்நெடுமாறன் என சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாராட்டப்பட்ட பாண்டிய மன்னன் யார்?
அரசகேசரி மாறவர்மன்.

227. இறைவனிடத்தில் அடியார் கொண்டுள்ள பக்திப் பெருக்கினைப் புலப்படுத்த உகந்த யாப்பு.
விருத்தம்.

228. பல்லவர் காலத்தில் பெருவழக்காயிருந்த இலக்கிய வடிவம்
பதிகம்

229. பல்லவர் காலத்தில் தெய்வானுபவங்களை உலகியல் வாழ்கை அனுபவங்களில் அமைத்துக் கூறும் நூல்?
திருச்சிற்றம்பலக்கோவையார்.

230. அகத்திணைப்பண்பு, புறத்திணைப்பண்பு விரவிவர அமைந்த இலக்கியத்திற்கு உதாரணமாக அமைபவை?
முத்தொள்ளாயிரம், பாண்டிக்கோவை, நந்திக்கலம்பகம்.

231. நாட்டுப்புறப்பாடல் ஓசைமுறையைத் தழுவி அமைந்த பதிகங்கள் சில?
திருவம்மானை, திருச்சாழல், திருப்பொன்னூசல், கண்ணன் குழல்வாரக் காக்கையை அழைத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

232. நாயன்மார் என்பதன் பொருள்?
தலைவன்

233 ஆழ்வார் என்பதன் பொருள்
இறைவனுடைய குணங்களில் ஆழ்ந்த பக்தி கொண்டவர்.

234. திருமுறைகளைத் தொகுத்தவர்.
நம்பியாண்டார் நம்பி.

235. ஆழ்வார்களின் திருப்பாசுரங்களைத் தொகுத்தவர்.
நாதமுனிகள்.

236. வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற சித்தர் கணத்தைத் தம்பாடல்களில் சிறப்பாகப் பாடியவர்
தாயுமானவர்.

237. முதலாழ்வார்கள் எனப்பட்டோர்.
பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்.

238. பக்திசாரர் என அழைக்கப்பட்டவர்?
திருமழிசையாழ்வார்.

239. நான்முகன் திருவந்தாதி பாடியவர்
திருமழிசையாழ்வார்.

240. "அமலன் ஆதிபிரான்....." எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடியவர்.
திருப்பாணழ்வார்.

241. நாலுகவிப் பெருமான், அருள்மாரி என அழைக்கப்பட்டவர்.
திருமங்கையாழ்வார்.

242. திருமாலுக்குத் தாண்டகம் பாடியவர்.
திருமங்கையாழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

243. விஷ்ணுசித்தர், பட்டர்பிரான் என அழைக்கப்பட்டவர்.
பெரியாழ்வார்.

244. திருமாலுக்குத் திருப்பல்லாண்டு பாடியவர்.
பெரியாழ்வார்.

245. சூடிக் கொடுத்த நாச்சியார் என அழைக்கப்பட்டவர்?
ஆண்டாள்.

246. இறைவனிடத்தில் அடியார் கொண்டுள்ள அன்பை நாயக நாயகி பாவத்தில் அமைத்துப் பாடிய பெண்பாற் புலவர்.
ஆண்டாள்.

247. மாறன் சட்கோபன் என அழைக்கப்பட்ட ஆழ்வார்.
நம்மாழ்வார்.

248. நம்மாழ்வாரைக் குருவும் தெய்வமுமாகக் கொண்டு பாடப் பட்ட பதிகம் எது? பாடியவர் யார்?
"கண்ணிநுன் சிறுதாம்பு........." எனும் பதிகம்
பாடியவர் - மதுரகவியாழ்வார்

249. பல்லவர் காலத்தில் தோன்றிய இலக்கண நூல்கள்?
சங்க யாப்பு, பாட்டியல் நூல்.

250. பாரதவெண்பா பாடியவர்?
பெருந்தேவனார்.

251. நந்திக் கலம்பத்தின் பாட்டுடைத்தலைவன்.
மூன்றாம் நந்திவர்மன்.

252. கலம்பகங்களுக்கெல்லாம் காலத்தால் முந்திய கலம்பகம்.
நந்திக்கலம்பகம்.

253. முடியுடை மூவேந்தர் பற்றிய தொள்ளாயிரம் பாடல்களின் தொகுப்பு.
முத்தொள்ளாயிரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

254. முத்தெள்ளாயிரம் பாடல்கள் காணப்படுவது?
புறத்திரட்டிலே.

255. இயற்றமிழிலக்கியம் அகவல் முதலிய பாவகைகளுள் யாதேனுமொன்றில் அமைதல் வேண்டும் எனும் மரபுக்கிணங்க அகவற்பாவிலான காவியம்.
பெருங்கதை.

256. பெருங்கதை எனும் இலக்கியத்தின் முதனூலாக அமைவது.
பிருகத் கதை – துர்விநீதன் இயற்றியது.

257. பெருங்கதை வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகின்றது.
கொங்குவேள் மாக்கதை, உதயணன் காதை

258. வடமொழியும் தமிழ்மொழியும் கலந்த ஓர் புதிய உரைநடை எவ்வாறு அழைக்கப்படும்?
மணிப்பிரவாளநடை.

259. திராவிட வேதம் என அழைக்கப்படுவது எது?
திருவாய்மொழி

260. சங்கப்புலவர்களுக்குத் தனிக்கோயில் எங்குள்ளது?
மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில்.

261. நெடுந்தொகை எனப் பெயர்பெறும் எட்டுத் தொகை நூல் எது?
அகநானூறு

262. ஆபுத்திரனுக்கு அட்சய பாத்திரம் தந்தது யார்?
சிந்தாதேவி.

263. "புறப்பொருள் வெண்பா மாலை"யின் ஆதாரநூல் எது?
பன்னிருபடலம்.

264. தமிழ் இலக்கியத்தில் அரசவைப் புலவர் என முதன் முதன் குறிப்பிடப்பட்டவர் யார்?
மாங்குடி மருதனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

265. “தஞ்சைவாணன் கோவை” யாரால் எழுதப்பட்டது?
பொய்யாமொழிப்புலவர்.

266. நெடுநல்வாடை என்பதன் பொருள் யாது?
நெடிதாகிய நல்ல வாடை

267. வடமொழியில் பாரதம் பாடியவர் யார்?
வியாசர்.

268. அகநானூறு எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
மூன்று பிரிவுகள்.

269. வெற்றி பெற்றோர் சூடும் பூ எது?
வாகை.

270. தொல்காப்பியர் குறிப்பிடும் “காஞ்சி“ எதைப்பற்றியது?
நிலையாமையைப் பேசுவது.

271. வெண்பாப் பாட்டியல் எனும் நூலை பாடியவா் யாா்?
குணவீர பண்டிதா்

272. வெண்பாப் பாட்டியலின் மறுபெயா் யாது?
வச்சணந்திமாலை

273. தமிழில் தோன்றிய முதல் உலா நூல் எது?
திருக்கைலாய ஞான உலா.

274. பெரியபுராணத்திற்கு சேக்கிழார் இட்ட பெயர் என்ன?
திருத்தொண்டர் புராணம்.

275. காய்ச்சீர் எந்தப் பாவிற்குரியது?
வெண்பா.

276. நாச்சியார் திருமொழி யாரால் பாடப்பட்டது?
ஆண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

277. “திருக்கோவையார்“ பாட்டுடைத் தலைவன் யார்?
தில்லை நடராசர்.

278. களப்பிரர்களைப் பற்றிக் குறிப்பிடும் பக்தி நூல் எது?
பெரியபுராணம்.

279. “கூடற்றமிழ்“ என்றழைக்கப்படும் நூல் எது?
மதுரைக்காஞ்சி.

280. “கந்தரந்தாதி“ யார் எழுதியது?
அருணகிரிநாதர்.

281. “அப்பர்“ என்று திருநாவுக்கரசரை அழைத்தவர் யார்?
திருஞானசம்பந்தர்.

282. சமண மதத்தில் இருந்தபோது திருநாவுக்கரசரின் பெயர் என்ன?
தருமசேனர்.

283. “பராபரக்கண்ணி“ பாடியவர் யார்?
தாயுமானவர்.

284. பத்துப்பாட்டு நூல்களுள்ளும் அடியளவால் மிக நீண்டது.
மதுரைக்காஞ்சி

285. மதுரைக்காஞ்சி எனும் நூல் யாரால் யாரைப்பற்றி பாடப்பட்டது?
பாடியது - மாங்குடி மருதனார்
பாடப்பட்டது - தலையாங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.

286. இறைத் தொண்டிற்காக வழிப்பறி செய்தவர் யார்?
திருமங்கையாழ்வார்.

287. “பரகாலன்“ என்றழைக்கப்பட்ட ஆழ்வார் யார்?
திருமங்கையாழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

288. "உத்தரகாண்டம் எழுதியவர் யார்?
ஒட்டக்கூத்தர்.

289. காயசண்டிகையைத் தாக்கிய நோய் எது?
யானைத்தீனி என்னும் கொடும்பசி நோய்.

290. கோப்பெருந்தேவியின் சிலம்பில் இருந்த பரல்கள் எவை?
முத்து.

291. உதயகுமாரனின் முற்பிறப்புப் பெயர் என்ன?
இராகுலன்.

292. "நியாய தத்துவம்" நூலின் ஆசிரியர் யார்?
நாதமுனிகள்.

293. "ஆண்டாள் " யாருடைய வளர்ப்பு மகள்?
பெரியாழ்வார்.

294. மணிமேகலை காப்பியத்திற்கு ஆசிரியர் இட்ட பெயர் என்ன?
மணிமேகலைத்துறவு.

295. மணிமேகலையின் தோழி யார்?
சுதமதி.

296. தொல்காப்பியத்திற்கு முதல் உரை எழுதியவர்.
இளம்பூரணர்.

297. "சேனாவரையர் " என்பதன் பொருள் யாது?
படைத்தலைவர்.

298. "திருவானைக்கா உலா" எழுதியவர் யார்?
காளமேகப்புலவர்.

299. "யாழ்நூல்" எழுதியவர் யார்?
விபுலாநந்த சுவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

300. "போற்றிப் ப∴றொடை" என்ற வெண்பாவைப் பாடியவர் யார்?
உமாபதி சிவாசாரியார்.

301. ஆதிரையிடம் பிச்சை பெற்றவள் யார்?
மணிமேகலை.

302. "குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்" என்று பாடியவர் யார்?
ஒட்டக்கூத்தர்.

303. "வழுதி" என்பது யாரைக் குறிக்கும்?
பாண்டியரை.

304. காலையில் பாடும் இராகம் எது?
பூபாளம்.

305. "பனம்பூமாலை" யாருக்குரியது?
சேரர்.

306. "மீன்கொடி" யாருக்குரியது?
பாண்டியர்.

307. சூளாமணியின் ஆசிரியர் யார்?
தோலாமொழித்தேவர்.

308. தாலாட்டுப் பாடும் இராகம் எது?
நீலாம்பரி.

309. பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களின் தொகுப்பு?
நாலாயிரத் திவ்விய பிரபந்தம்

310. மூவேந்தர்களின் தலைநகரைக் காண்டமாகக் கொண்டு அமைந்துள்ள நூல் எது?
சிலப்பதிகாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

311. கம்பராமாயணத்தின் மூலநூல் எது?
வால்மீகி இராமாயாணம்.

312. வேப்பம் பூமாலை யாருக்குரியது?
பாண்டியருக்கு.

313. காளமேகப் புலவரின் இயற்பெயர் என்ன?
வரதன்

314. "சதாவதானி" என்றழைக்கப்படும் இஸ்லாமியப் புலவர் யார்?
செய்குத்தம்பி பாவலர்.

315. தேம்பாவணி" என்ற காப்பியத்தை எழுதியவர் யார்?
வீரமாமுனிவர்.

316. "முகையதீன் புராணம்" பாடியவர் யார்?
வண்ணக்களஞ்சியப்புலவர்.

317. இலக்கணக் கொத்து நூலாசிரியர் யார்?
ஈசான தேசிகர்.

318. "அரிச்சந்திரப் புராணம்" இயற்றியவர் யார்?
வீரகவிராயர்.

319. தண்டியலங்காரத்தின் ஆதாரநூல் எது?
காவியதர்சம். (வடமொழி)

320. தமிழில் வந்த முதல் நாவல் எது?
பிரதாப முதலியார் சரித்திரம்.

321. "இரட்சணிய யாத்திரிகம்" - எதன் மொழிபெயர்ப்பு?
"பில்கிரிம்ஸ் புரோக்ரஸ்" என்ற நூலின் மொழிபெயர்ப்பு.

322. "புனிதவதியார்" வேறு எப்பெயரால் அழைக்கப்பெறுகிறார்?
காரைக்காலம்மையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

323. "பரமார்த்த குரு கதை" எழுதியவர் யார்?
வீரமாமுனிவர்.

324. "தொன்னூல் விளக்கம் எழுதியவர் யார்?
வீரமாமுனிவர்.

325. "தமிழ் வியாசர்" என அழைக்கப்படுபவர் யார்?
நம்பியாண்டார் நம்பி.

326. வண்ணக்களஞ்சியப் புலவரின் இயற்பெயர் என்ன?
முகமது இபுராகிம்.

327. "தமிழ்த் தாத்தா" என அழைக்கப்படுபவர் யார்?
உ.வே.சாமிநாத ஐயர்.

328. "இங்கு ஒரு தமிழ் மாணவன் உறங்குகின்றான்" என்று தன் கல்லறையில் எழுதச்சொன்னவர் யார்?
ஜி.யு.போப்.

329. வீரமாமுனிவரின் இயற்பெயர் என்ன?
கான்ஸ்டான்டைன் ஜோசப் பெஸ்கி.

330. "இரட்டைப் புலவர்கள்" பாடிய உலா நூல் எது?
ஏகாம்பரநாதர் உலா.

331. "குற்றாலக் குறவஞ்சி" பாடியவர் யார்?
திரிகூடராசப்பக் கவிராயர்.

332. சீறாப் புராணம் பாடியவர்?
உமறுப்புலவர்.

333. விபுலானந்தரின் இயற்பெயர் என்ன?
மயில்வாகனன்.

334. சுக்கு, மிளகு, திப்பிலி, ஆகிய மூன்றுக்கும் சேர்த்து என்ன எவ்வாறு அழைக்கப்படும்?
திரிகடுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

335. திராவிட மொழிகளைத் திருந்திய மொழிகள், திருந்தா மொழிகள் என்று பகுத்தவர் யார்?
கால்டுவெல்.

336. "பாண்டிக்கோவை" - பாட்டுடைத்தலைவன் யார்?
நெடுமாறன்.

337. இரட்டைப் புலவர்களின் இயற்பெயர்கள் யாவை?
இளஞ்சூரியன், முதுசூரியன்.

338. அந்தம் முதலாய் வரத் தொடுப்பதற்கு என்ன பெயர்?
அந்தாதி.

339. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்" ஆசிரியர் யார்?
குமரகுருபரர்.

340. "யாயும் ஞாயும் யாராகியரோ," என்ற குறுந்தொகைப் பாடலாசிரியர் யார்?
செம்புலப் பெயல் நீரார்.

341. "மாறன் அலங்காரம்" - எழுதியது யார்?
குருகைப் பெருமாள் கவிராயர்.

342. நாலடியாரை மொழிபெயர்த்தவர் யார்?
ஜி.யு.போப்.

343. "இலக்கண விளக்கம்" - ஆசிரியர் யார்?
வைத்திய நாத தேசிகர்.

344. "மறைசை அந்தாதி" - பாடியது யார்?
சின்னத்தம்பிப் புலவர்.

345. "நல்ல தீர்ப்பு" - என்ற நாடகத்தை எழுதியவர் யார்?
பாரதிதாசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

346. பல்லவர் காலத்தில் தோன்றியதாகக் கூறப்படும் உரைநடை நூல்கள் எவை?
ஸ்ரீபுராணம், கயசிந்தாமணி, இறையனார் அகப்பொருளுரை.

347. முதன்முதலாக தமிழ்ப்புலவர்கள் வடமொழிக் காவிய முறையினைத் தழுவி தமிழிற் காவியங்களை இயற்றிய காலம்.
சோழர் காலம்

348. முதன்முதலில் பாவினங்களைக் கையாண்டு காவியம் படைத்து இயற்றமிழ் இலக்கியத்தினைப் புதியவழியில் போகச் செய்தவர்?
திருத்தக்கதேவர்.

349. சைவத் திருமுறைகள் எத்தனையாக வகுக்கப்பட்டுள்ளன?
பன்னிரண்டு.

350. திருத்தொண்டர் திருவந்தாதி பாடியவர்?
நம்பியாண்டார் நம்பி.

351. வடமொழி மரபினைத் தழுவித் தமிழிலெழுந்த காப்பியங்களுள் பெருங்காப்பிய இலக்கணங்கள் யாவும் சிறப்பாக அமைந்த நூல்?
சீவகசிந்தாமணி.

352. பெருங்காப்பியங்களுள் முதலில் வைத்து எண்ணப்படுவது?
சீவகசிந்தாமணி.

353. சூளாமணி எனும் காப்பியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?
பயாபதி எனும் அரசனின் மகன் திவிட்டன்.

354. "பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்று புகழப்படுபவர்?
சேக்கிழார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

355. அறுபத்து மூன்று நாயன்மாரின் வாழ்க்கைச் சிறப்பினை ஆராய்ந்து கூறும் நூல்?
பெரியபுராணம்.

356. பெரியபுராணத்தின் வழிநூலாகவும் சார்புநூலாகவும் அமைபவை?
வழிநூல் - திருத்தொண்டர் தொகை – சுந்தரர்.
சார்புநூல்- திருத்தொண்டர் திருவந்தாதி – நம்பியாண்டார் நம்பி.

357. பெரியபுராணத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?
சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

358. கந்தபுராணத்தை இயற்றியவர்?
கச்சியப்ப சிவாச்சாரியார்.

359. கந்தபுராணத்தின் மூலம் எது?
ஸ்கந்தபுராணத்தின் சங்கர சங்கிதை எனும் பகுதி (வடமொழி)

360. "நவிறொறும் நவிறொறும் நூனயம் பயப்பது" எனப் புகழப்படும் நூல் எது?
கந்தபுராணம்.

361. கவிச்சக்கரவர்த்திகள் எனப் புகழப்படுபவர்கள்?
கம்பர், சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர்.

362. கலிங்கத்துப் பரணியைப் பாடியவர்யார்? அது எதனைப் பாடுகிறது?
சயங்கொண்டார்.
முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தில் நிகழ்ந்த கலிங்கப் போரை.

363. பரணிப் பிரபந்தங்களுள் தலையாய பரணி நூல் எது?
கலிங்கத்துப்பரணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

364. “தென்றமிழ்த் தெய்வப்பரணி” எனப் பாராட்டப்படும் பரணி எது? அவ்வாறு பாராட்டியவர் யார்?
கலிங்கத்துப்பரணி ஒட்டக்கூத்தர்.

365. மறைமலையடிகளின் சொற்பொழிவுகளின் தொகுப்பு?
சைவ சித்தாந்த ஞானபோதம்

366. மூவருலா பாடியவர் யார்? இதில் புகழப்படுவோர் யார்?
ஓட்டக்கூத்தர்.
விக்கிரமச்சோழன், இரண்டாம் குலோத்துங்கச்சோழன் , இரண்டாம் இராச இராசசோழன்.

367. குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் பாடியவர்?
ஓட்டக்கூத்தர்.

368. தக்கயாகப் பரணி பாடியவர்?
ஓட்டக்கூத்தர் (வீரபத்திரக் கடவுள் தக்கனைக் கொன்று அவன் செய்த யாகத்தை அழித்த கதை.)

369. நளவெண்பாவைப் பாடியவர்.
புகழேந்திப்புலவர்.

370. பட்டினத்துப்பிள்ளை பாடிய பக்திப் பாசுரங்கள் எதனுள் அடக்கப்படுகிறது?
புதினொராந் திருமுறை.

371. பின்வரும் இலக்கண நூல்களை ஆக்கிய ஆசிரியர் பெயர் யாது?

| **இலக்கண நூல்கள்** | **ஆசிரியர்** |
|---|---|
| யாப்பருங்கலம் | அமிர்தசாகரர் |
| யாப்பருங்கலக் காரிகை | |
| வீரசோழியம் | புத்தமித்திரனார் |
| நன்னூல் | பவணந்தி முனிவர் |
| நேமிநாதம் | குணவீரபண்டிதர் |
| நம்பியகப்பொருள் | நாற்கவிராசநம்பி |
| தண்டியலங்காரம் | தண்டியாசிரியர் |
| தொல்காப்பியம் | தொல்காப்பியர் |
| இலக்கணச்சுருக்கம் | ஆறுமுகநாவலர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

372. முப்பொருள் உண்மையினையும் அவற்றின் இலக்கணங் களையும் வீடுபேற்றிற்குரிய நெறியினையும் அதன் பயனை யும் எடுத்துக்கூறுவன.
சைவசித்தாந்த நூல்கள்.

373. பின்வரும் சைசித்தாந்த நூல்களின் ஆசிரியர்கள் யாவர்?

| சைவசித்தாந்த நூல்கள் | இயற்றியவர் |
|---|---|
| திருவுந்தியார் | திருவியலூர் உய்யவந்த தேவர் |
| திருக்களிற்றுப்படியார் | திருக்கடவூர் உய்யவந்த தேவர் |
| சிவஞானபோதம் | மெய்கண்டதேவர் |
| சிவஞானசித்தியார்<br>இருபா இருப∴து | சிவஞானசித்தியார் |
| உண்மைவிளக்கம் | மனவாசங்கடந்தார் |
| சிவப்பிரகாசம்<br>திருவருட்பயன்<br>வினாவெண்பா<br>போற்றிப்ப∴றொடை<br>கொடிக்கவி<br>நெஞ்சுவிடுதூது<br>உண்மைநெறி விளக்கம்<br>சங்கற்ப நிராகரணம் | உமாபதி சிவாச்சாரியார் |

374. சைவசித்தாத்தந்தத்தின் முதனூல் எனப்படுவது?
சிவஞானபோதம்.

375. தொல்காப்பியத்திற்கு முதல் முதல் உரையெழுதியவர்?
இளம்பூரணர்.

376. தத்துவ சாத்திரக் கொள்கைகளை விளக்கும் பரணி இலக்கியங்கள் எவை?
மோகவதைப்பரணி, அஞ்ஞைவதைப்பரணி.

377. மோகவதைப்பரணி, அஞ்ஞைவதைப்பரணி. என்பவற்றின் ஆசிரியர்?
தத்துவராயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

378. வசை பாடுவதில் வல்லவர்?
காளமேகம்.

379. பிரபுலிங்கலீலை பாடியவர் யார்?
சிவப்பிரகாச சுவாமிகள்.

380. கற்பனைக்களஞ்சியம் எனப்புகழப்படும் புலவர் யார்?
சிவப்பிரகாச சுவாமிகள்.

381. திவ்விய கவி எனப் பாராட்டப்படுபவர்?
பிள்ளைப் பெருமாளையங்கார்.

382. பதினேழாம் நூற்றாண்டில் மதுரையிலிருந்து கத்தோலிக்க சமயத்தொண்டு புரிந்தவர் யார்?
தத்துவபோதக சுவாமிகள்.

383. தமிழுரையாசிரியர்களுள் இலக்கிய இலக்கண அறிவில் தலைசிறந்தவர்?
நச்சினார்க்கினியார்.

384. திருக்குறளுக்கு உரை வகுத்தோரில் சிறந்தவராகக் கொள்ளப்படுபவர்?
பரிமேழலகர்

385. திருவாய்மொழி அருளிச் செய்தவர்?
நம்மாழ்வார்.

386. நைடதம் எனும் நூலின் ஆசிரியர்.
அதிவீரராமபாண்டியுன்.

387. பதிணெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒரேயொரு புறநூல் எது?
களவழி நாற்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

388. தொல்காப்பியம், "உரிப்பொருள்" என்று எதனைக் குறிக்கிறது?
ஒழுக்கம்.

389. தொல்காப்பியம் எத்தனை இயல்களைக் கொண்டது?
இருபத்து ஏழு.

390. காளிதாசரின் சாகுந்தலத்தைத் தமிழில் பாடியவர்?
மறைமலையடிகள்

391. நன்னூல் கூறும் நூல் உத்திகள் எத்தனை?
முப்பத்திரண்டு.

392. பதினெண் மேற்கணக்கு நூல்கள் எவை?
எட்டுத்தொகை, பத்துப்பாட்டு.

393. முதல் "தூது நூல்" எது?
நெஞ்சுவிடு தூது.

394. பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களில் குறிப்பிடப்படும் பருவங்கள் எத்தனை?
பத்து.

395. நற்றிணையைத் தொகுத்தவர் யார்?
பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி.

396. பாலைத்திணைக்குரிய தெய்வம் எது?
கொற்றவை.

397. பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்து பாடியவர் யார்?
கபிலர்.

398. தமிழில் முதன் முதலாக இலம்பகம் எனும் பிரிவுகளை உடைய நூல்?
சீவகசிந்தாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

399. பதிற்றுப்பத்தில் எட்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?
தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை.

400. தொல்காப்பியர் கூறும் சார்பெழுத்துக்கள் எத்தனை?
மூன்று.

401. பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே" என்று கூறும் நூல் எது?
நன்னூல்.

402. உலகநீதி எனும் நீதி நூலின் ஆசிரியர்?
உலகநாதர்

403. "சிறுபாணாற்றுப்படை" பாடியவர் யார்?
நத்தத்தனார்.

404. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் நீதி நூல்கள் எத்தனை?
பதினொன்று.

405. "நடுவண் ஐந்திணை" என்பது எந்தத் திணை?
பாலைத்திணை.

406. ஐங்குறுநூறு கடவுள் வாழ்த்து - பாடியவர் யார்?
பெருந்தேவனார்.

407. கல்வி வல்லார் கண்ட கலி" எனப்படும் நூல் எது?
கலித்தொகை.

408. நறுந்தொகை என அழைக்கப்படும் நீதி நூல்?
வெற்றிவேற்கை

409. "பரத்தையர்" என்போர் எந்த நிலத்தோடு தொடர்புடையவர்கள்?
மருதநிலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

410. "எயினர்" - எந்நில மக்கள்?
பாலைநிலம்

411. "தொண்டகச் சிறுபறை" எந்நிலத்திற்கு உரியது?
குறிஞ்சி நிலம்.

412. "பரதவர்" - எந்நில மக்கள்.
நெய்தல் நிலம்.

413. தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்புகள் எத்தனை?
எட்டு.

414. "சிறுபாணாற்றுப்படை" பாட்டுடைத் தலைவன் யார்?
நல்லியக்கோடன்.

415. குறவர் - எந்நில மக்கள்?
குறிஞ்சிநிலம்.

416. "கூடல்" என அழைக்கப்படும் ஊர் எது?
மதுரை.

417. ஏழு நரம்புகளைக் கொண்ட யாழ் எது?
செங்கோட்டு யாழ்.

418. ஆண்களின் சிறப்பினைப் புகழ்ந்துபாடும் திணை எது?
பாடாண் திணை

419. "சூறையாடுதல்" எந்த நிலத்தோடு தொடர்புடையது?
பாலை.

420. பாரதியின் ஞானகுரு யார்?
நிவேதிதா தேவி.

421. ஞானபீடப் பரிசு பெற்ற அகிலனின் நூல் எது?
சித்திரப்பாவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

422. தமிழில் ஐந்திலக்கணம் எவை?
எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.

423. "தமிழ்த்தாய் வாழ்த்து" - பாடலை இயற்றியவர் யார்?
பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை.

424. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய அருளாளா்?
இராமலிங்க அடிகள்

425. தமிழ்ப் பல்கலைக்கழகம் எங்குள்ளது?
தஞ்சாவூர்.

426. தமிழிலுள்ள இதிகாசங்கள் எவை?
கம்பராமாயணம், மகாபாரதம்.

427. "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" என்று கூறும் நூல் எது?
புறநானூறு.

428. "மலைபடுகடாம்" என்ற நூலின் வேறு பெயர் என்ன?
கூத்தராற்றுப்படை.

429. "நாடகக் காப்பியம்" என்றழைக்கப்படும் நூல் எது?
சிலப்பதிகாரம்.

430. சிற்றிலக்கியங்களுக்கு வேறு பெயர் என்ன?
பிரபந்தங்கள்.

431. "ஈட்டி எழுபது" என்ற நூலை எழுதியவர் யார்?
ஓட்டக்கூத்தர்.

432. சிறுபஞ்சமூலம் என்பதன் பொருள் யாது?
சிறிய ஐந்து வேர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

433. அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் அறநூல் எது?
திருக்குறள்.

434. குறுந்தொகையைத் தொகுத்தவர் யார்?
பூரிக்கோ.

435. வஞ்சிப்பாவிற்குரிய சீர் எது?
கனிச்சீர்

436. "பட்டினப்பாலை" என்ற நூலின் ஆசிரியர் யார்?
கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

437. "யாதும் ஊரே : யாவரும் கேளிர்" எனக் கூறும் நூல் எது?
புறநானூறு.

438. "வஞ்சி நெடும்பாட்டு" என்றழைக்கப்படும் நூல் எது?
பட்டினப்பாலை.

439. குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள பாடல்கள் எத்தனை?
நானூறு.

440. சேரமன்னனை மட்டுமே பாடும் சங்ககால நூல் எது?
பதிற்றுப்பத்து.

441. சேக்கிழாரின் இயற்பெயர் என்ன?
அருண்மொழித்தேவர்.

442. கண்ணகி வரலாற்றை இளங்கோவடிகளுக்குக் கூறியவர் யார்?
சீத்தலைச்சாத்தனார்.

443. கம்பரை ஆதரித்த வள்ளல் யார்?
சடையப்ப வள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

444. மன்னன் காணும்படியாக நடிக்கும் நாடகத்தின் பெயர் என்ன?
வேத்தியல்.

445. மணிப்பிரவாள நடையை வளர்த்தவர்கள் யார்?
சமணர்கள்.

446. குண்டலகேசி எனும் பௌத்த நூலுக்கு எதிராகத் தோன்றியதாகக் கூறப்படும் சமண நூல்?
நீலகேசி

447. "நளவெண்பா" எத்தனை காண்டங்களைக் கொண்டது?
மூன்று. சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம்.

448. குட்டித் தொல்காப்பியம் என அழைக்கப்படுவது?
இலக்கண விளக்கம்

449. "ஐந்தாவது வேதம்" எனப்படுவது எது?
மகாபாரதம்.

450. "பெரியபுராணம்" – உட்பிரிவுகளின் பெயர் என்ன?
சருக்கம்.

451. "சின்னூல்" என்றழைக்கப்படும் நூல் எது?
நேமிநாதம்.

452. "புறப்பொருள் வெண்பாமாலை" - இயற்றியவர் யார்?
ஐயனாரிதனார்.

453. "தண்டியலங்காரம்" – எழுதியவர் யார்?
தண்டியாசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

454. “திருப்புகழ்” பாடியவர் யார்?
அருணகிரிநாதர்.

455. “சூடாமணி நிகண்டு“ ஆசிரியர் யார்?
மண்டல புருடர்.

456. “திருத்தொண்டர் திருவந்தாதி” பாடியவர் யார்?
நம்பியாண்டார் நம்பி.

457. “நரிவிருத்தம்” பாடியவர் யார்?
திருத்தக்க தேவர்.

458. திருவிளையாடற் புராணத்தினைப் பாடியவர்?
பரஞ்சோதி முனிவர்

459. பெண்களின் பருவங்கள் எத்தனை?
ஏழு.

460. “தமிழில் பாரதம்” பாடியவர் யார்?
வில்லிபுத்தூரர்.

461. “நெஞ்சாற்றுப்படை” எனப்படும் நூல் எது?
முல்லைப்பாட்டு.

462. “விநோதரச மஞ்சரி” என்ற சிறந்த உரைநடை நூலைத் தந்தவர்?
வீராச்சாமி செட்டியார்.

463. “திருமந்திரம்” எத்தனை பாடல்களைக் கொண்டது?
மூவாயிரம்.

464. தொண்டர் சீர் பரவுவார் எனப்படுபவர் யார்?
சேக்கிழார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

465. மூதுரை நூலுக்கு மற்றொரு பெயரென்ன?
வாக்குண்டாம்.

466. "உரிச்சொல் நிகண்டு" – எழுதியவர் யார்?
காங்கேயர்.

467. தமிழில் முதல் சதக இலக்கியம் எது?
திருச்சதகம்.

468. "பன்னிரண்டாம் திருமுறை" பாடியவர் யார்?
சேக்கிழார்.

469. "நாலாயிரக்கோவை" – பாடியவர் யார்?
ஒட்டக்கூத்தர்.

470. "சரசுவதி அந்தாதி" பாடியவர் யார்?
கம்பர்.

471. தொல்காப்பியம் யார் தலைமையில் அரங்கேற்றப்பட்டது?
அதங்கோட்டாசான்.

472. பண் வகுக்கப்பெற்ற சங்கநூல் எது?
பரிபாடல்.

473. "தொல்காப்பியப் பாயிரம்" – பாடியவர் யார்?
பனம்பாரனார்.

474. கம்பர் தம் நூலுக்கு இட்ட பெயர் என்ன?
இராமாவதாரம்.

475. வச்சணந்தி மாலைக்கு வழங்கும் வேறு பெயர் என்ன?
வெண்பாப் பாட்டியல்.

476. பாரதப்போரின்போது உணவு வழங்கியவன் யார்?
பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

477. “மணநூல்” எனப்பெயர் பெற்ற காப்பியம் எது?
சீவகசிந்தாமணி.

478. அகமா? புறமா? என்ற கேள்விக்குக் காரணமாக அமையும் நெடுநல்வாடைப் பாடல் வரி எது?
“வேம்பு தலையாத்த நோன் காழ் எஃகம்”

479. பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவித்தல்” – எவ்வகை இலக்கியம்?
ஆற்றுப்படை.

480. “அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்” எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?
பாரிமகளிர்.

481. பதினோராம் திருமுறையில் இடம்பெறும் ஆற்றுப்படை நூல் எது?
திருமுருகாற்றுப்படை.

482. “கம்பராமயாணம்” எங்கு அரங்கேற்றப்பட்டது?
திருவரங்கம்.

483. “தேவாரம்” பாடிய மூவர் யார்?
ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர்.

484. அருணகிரிநாதர் அருளிய நூல்கள் யாவை?
திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம்.

485. முதல் ஏழு வள்ளல்கள் யாவர்?
சகரன், காரி, நளனி, துந்துமாரி, நிருதி, செம்பியன், விரான்.

486. இடை ஏழு வள்ளல்கள் யாவர்?
அக்குரன், அந்திமான், கண்ணன், சந்தன், சந்திமான், சிசுபாலன், வக்கிரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

487. கடையேழு வள்ளல்கள் யாவர்?
பாரி, ஆய், எழினி, நள்ளி, மலையன், பேகன், ஓரி.

488. தமிழில் கிடைத்துள்ள தொன்மையான இசை நூல் எது?
பரிபாடல்.

489. "முருகு" என்பதன் பொருள் என்ன?
அழகு.

490. கண்ணகியின் சிலம்பில் இருந்த பரல்கள் எவை?
மாணிக்கம்.

491. திருமுறைகளைத் தொகுப்பித்தவர் யார்?
இராசராச சோழன்.

492. பத்துப்பாட்டு நூல்களின் ஆசிரியர்கள்

| **நூல்கள்** | **ஆசிரியர்கள்** |
|---|---|
| திருமுருகாற்றுப்படை | - நக்கீரர் |
| பொருநராற்றுப்படை | - முடத்தாமக் கண்ணியார் |
| சிறுபாணாற்றுப்படை | - நல்லூர் நத்தத்தனார் |
| பெரும்பாணாற்றுப்படை | - உருத்திரங்கண்ணனார் |
| முல்லைப்பாட்டு | - நப்பூதனார் |
| மதுரைக்காஞ்சி | - மாங்குடி மருதனார் |
| நெடுநல்வாடை | - நக்கீரர் |
| குறிஞ்சிப்பாட்டு | - கபிலர் |
| பட்டினப்பாலை | - உருத்திரங்கண்ணனார் |
| மலைபடுகடாம் | - பெருங்கௌசிகனார் |

493. கலித்தொகை எனும் நூலின் பகுப்பாக அமையும் ஐவகைக் கலியும் அதன் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| பாலைக்கலி | - பெருங்கடுங்கோ |
| குறிஞ்சிக்கலி | - கபிலர் |
| மருதக்கலி | - மருதன் நல்லுத்திரனார் |
| நெய்தற்கலி | - நல்லத்துவனார் |
| முல்லைக்கலி | - சோழன் நல்லுத்திரனார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

494. பதிணெண் கீழ்க்கணக்கு நூல்களும் அதன் ஆசிரியரும்

| **நூல்கள்** | **ஆசிரியர்** |
|---|---|
| நாலடியார் | - சமணமுனிவர் |
| நான்மணிக்கடிகை | - விளம்பிநாகனார் |
| இனியவை நாற்பது | - பூதஞ்சேந்தனார் |
| இன்னா நாற்பது | கபிலர் |
| களவழி நாற்பது | - பொய்கையர் |
| கார் நாற்பது | - மதுரைகண்ணன் கூத்தனார் |
| ஐந்திணை ஐம்பது | - மாறன்பொறையனார் |
| ஐந்திணை எழுபது | - மூவாதியார் |
| திணைமொழி ஐம்பது | - கண்ணஞ் சேர்ந்தனார் |
| திணைமாலை நூற்றைம்பது | - கணிமேதாவியார் |
| திருக்குறள் | - திருவள்ளுவர் |
| திரிகடுகம் | - நல்லாதனார் |
| ஆசாரக்கோவை | - பெருவாயின் முள்ளியார் |
| பழமொழி நானூறு | - முன்னுறை அரையனார் |
| சிறுபஞ்சமூலம் | - காரியாசான் |
| கைந்நிலை | - பொய்கையார் |
| முதுமொழிக்காஞ்சி | - மதுரை கூடலூர்க்கிழார் |
| ஏலாதி | - கணிமேதாவியார் |

495. சங்க இலக்கியங்களுள் பாவகையால் பெயர் பெற்ற நூல்கள் எவை?
கலித்தொகை, பரிபாடல்.

496. இரட்டையர் எனப்படும் இரு புலவர்கள்?
முதுசூரியர், இளஞ்சூரியர்

497. அணிகளின் தாய் எனப்படுவது?
உவமையணி

498. சரராமன் என அழைக்கப்படுபவர்?
சடையப்ப வள்ளல்

499. தமிழில் எழுந்த முதல் இஸ்லாமியக் காப்பியம்?
சீறாப்புராணம்

500. நவீன கவிதையின் முன்னோடி எனப்படுபவர்? பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளவாலை யா / புனித கென்றியரசர் கல்லூரித் தமிழாசிரியர் திருமதி. கவிதா சந்திரகுமார் அவர்களது தொகுப்பில் வெளிவரும் "தமிழறிவு" என்ற தலைப்பிலான நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெரிதும் மகிழ்வடைகின்றேன். பாடசாலை மற்றும் பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களது தமிழறிவு குறித்த சர்ச்சைகள் நிலவிவரும் சூழலில் "தமிழறிவு" வெளிவருகிறது. தமிழ் இலக்கியம், வரலாறு தொடர்பான தகவல்கள் பலவற்றைத் தமிழறிவு தாங்கி வருகிறது. தமிழை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்கள் மட்டுமல்லாது அனைவரும் படித்துப் பயன் விளைக்கவல்ல நூலாகத் "தமிழறிவு" அமையப் பெற்றுள்ளது.

தமிழ்ச் சிறப்புக் கலைமாணி, மற்றும் தமிழ் முதுகலைமாணிப் பட்டங்களை நிறைவு செய்துள்ள திருமதி. கவிதா சந்திரகுமார் தமிழறிவு நிரம்பப் பெற்றவர். அவரது பரந்தளவிலான தமிழறிவு இந் நூலில் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இவர் இதுபோன்ற பயனுள்ள நூல்கள் பலவற்றைத் தமிழுக்காக்கிட உளமார வாழ்த்துகின்றேன்.


**பேராசிரியர் கி. விசாகரூபன்**
பேராசிரியர் மற்றும் தலைவர்,
தமிழ்த்துறை,
கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.



**கங்கை பிறிண்டேர்ஸ்.**
743, கே.கே.எஸ்..றோட். (யாழ். இந்துக்கல்லூரி முன்பாக) யாழ்.
0776184567



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org